[1972 ஆகஸ்ட் 24

திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு ஓராண்டு முடிந்து விட்டது. இந்த ஓராண்டிலே, மதுவிலக்கு ரத்தினாலே, இந்த மாநிலத்து மக்களின் வாழ்க்கைத்தரம் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற ஆராய்ச்சியை அரசு செய்துள்ளதா? இல்லையென்றால் ஆராய்ச்சி செய்ய உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் சார்ந்துள்ள கட்சி ஆளுகின்ற மாராட்டியத்திலே மதுவிலக்கை ரத்து செய்திருக்கிறார்கள். அங்கு எப்படி வாழ்க்கைத் தரம் இருக்கிறதோ, அதைப் போல் தான் இங்கும் இருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஹோல்சேல் ஏஜெண்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த முறையை மாற்றி, கோவாப்பரேட்டிவ் யூனியன்களுக்கு அந்த ஹோல்சேல் ஏஜென்சி கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

கள்ளக்குறிச்சிக்கு தீயணைப்பு நிலையம்

* 299 வினா—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், கள்ளக்குறிச்சியில் தீயணைக்கும் நிலையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) கள்ளக்குறிச்சியில் தீயணைப்பு நிலையம் ஒன்றை நிர்மாணிக்க கடந்த ஆண்டு அக்டோபர் திங்களில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(இ) தீயணைப்பு நிலையத்திற்கான கட்டடம் கட்டி முடித்தவுடன் தீயணைப்பு நிலையம் இயங்கத் தொடங்கும்.

திரு. ந. தருமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, அதற்குரிய இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதா? எவ்வளவு மதிப்பீட்டில் தீயணைப்பு நிலையம் அமைக்க பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது 1970-71-ல் மணலி, கள்ளக்குறிச்சி, ஜெயங்கொண்டசோழபுரம் இந்த 3 இடங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தகவல். வரைபடங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன, தயாரானதும் கட்டடங்கள் தொடங்கும். அதற்குரிய தொடராச் செலவு ரூ. 2,15,000, தொடரும் செலவு ரூ. 1,21,000 ஆகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு

* 300 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 18—12—1971 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடு ஒன்று சென்னையில் நடைபெற்றதா?

(இ) ஆம் எனில், அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த கலெக்டர்களுடைய மாநாட்டில், யுத்தம் நடந்த காரணத்தினால், அந்த யுத்த காலத்திலே என்ன செய்வது, எந்தமாதிரி கமிட்டி அமைப்பது என்ற முடிவுகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது அந்த மாவட்ட ரீதியான கமிட்டிகள் செயல்படுகின்றனவா, செயல்படவில்லையா? செயல்படுகிறது என்று சொன்னால் எம்மாதிரி செயல்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது கமிட்டிகள் இருக்கின்றன, கலைக்கப்படவில்லை. ஆனால் செயலற்றிருக்கின்றன.

சென்னை நகரிலுள்ள சாலைகள்

* 301 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் எந்தெந்த சாலைகள் அண்மையில் அகலப்படுத்தப்பட்டன?

---

* 389–390-ஆம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.